**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 209/2006**

**வாதி தரப்பு சாட்சி–2 சிவக்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி:</u>**

பைமாஸ் எண்ணுக்குபின்னிட்டு ஏற்பட்ட 'அ' பதிவேடு நகலை கொண்டு வந்துள்ளேன். மேற்படி பதிவேடானது 1964ம் வருடம் உள்ளது. மேற்படி பதிவேட்டில் சர்வே எண் 598ற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. **மேற்படி 'அ' பதிவேட்டின் உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்பாடி சர்வே எண் எந்த வகைபாட்டை சேர்ந்தது என்றால் ரயத்துவாரி புஞ்சை நிலம் ஆகும். சர்வே எண் 598 ற்கான பட்டா எண் 690 ஆகும். நிலங்களுக்கான வரியை வசூல் செய்யும் போது ரசீதில் பட்டா எண் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்வை ரசீது வா.சா.ஆ.14, 16, 17, பட்டா எண் 690க்கு செலுத்தப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 42/2 எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால், மைலம்பட்டி தோட்டி ஊழியம் என பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 160/1 எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால், மைலம்பட்டி தோட்டி ஊழியம் என பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 406/1 எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால், மைலம்பட்டி தோட்டி ஊழியம் என பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 412/1 எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால், மைலம்பட்டி தோட்டி ஊழியம், பூஸ்துதி வண்டிப்பாதை என பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 520/3 எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால், மைலம்பட்டி தோட்டி ஊழியம் என பிரிக்கப்பட்டுள்ளது. தோட்டி ஊழியம் என்பது இனாம் வகையை சேர்ந்தது என்றால் சரிதான்.

**<u>18 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பைமாஸ் எண் 240ற்கான சர்வே எண் என்னவென்றால் 230/2 ஆகும்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**